## இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் - 2017

இராண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 5228–எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு நிறைவேறு முகவராகவும் மாகாண சபைகளின் மாகாண சுகாதார அமைச்சுக்கள் மாகாண மட்டத்தில் செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களாகக் காணப்படுகின்றன. ஊட்டச்சத்தின்மை மற்றும் தொற்றாத நோய்கள் என்பவற்றின் சவால்களிற்கு சிறந்த பதிலளிப்பதற்கு இயன்றதாக பொதுச் சுகாதாரத்தின் செயலாற்றல் நியமங்களை தரமுயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 26,000 மில்லியனிற்குச் சமமான எஸ்டீஆர் 129.8 மில்லியனாகக் (ஐ.அ.டொலர் 200) காணப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

### 1.3 ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இவ்ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இவ்ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால்

மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கு இணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையானது நிதிப்பிரமாணம் 150 மற்றும் அந்தந்த மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களினால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களினை உறுதிப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்கான ஒன்பது மாகாண சபைகளின் ஒதுக்கீட்டு கணக்குகளின் அடிப்படையில் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையானது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் அந்தந்த மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களினால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களினை உறுதிப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகள் பொதுத் திறைசேரியால் பேணப்பட்ட பதிவேடுகள், வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் ஒன்பது மாகாண சபைகளால் பேணப்பட்ட புத்தகங்கள், ஏடுகள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றுடன் உடன்பட்டிருந்தன. கடன் பெறுகைகளினைத் தவிர ஏற்பட்ட கிரயங்கள் மாகாண சபைகளின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான கண்காணிப்பு உதவி பிரிவில் முறையாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு இனங்காணப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஐடிஏ | 200 | 26,000 | 3,260 | 3,130.67 | 11,086.50 |
| **மொத்தம்** | **200** | **26,000** | **3,260** | **3,130.67** | **11,086.50** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் பிரகாரம், மாகாண சுகாதாரத்துறைக்கு முறையே மூலதன மற்றும் மீண்டெழும் செலவினத்தை எதிர்கொள்வதற்கு 2017 பாதீட்டு மதிப்பீட்டினூடாக ஒவ்வொரு மாகாண சபைக்கும் ரூபா 365 மில்லியன் தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. செயற்பாட்டு மற்றும் கண்காணிப்பு உதவிக்கு அலகிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 20 மில்லியன் ஒதுக்கீடு உள்ளடங்கலாக செயற்திட்டத்தின்

செயற்பாடுகளினை அமுல்படுத்துவதற்கு ரூபா 3,260 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகளில் 2017 திசெம்பர் 31 வரை ரூபா 3,130.67 மில்லியன் தொகையொன்று மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மத்திய மாகாணம் மற்றும் வட மத்திய மாகாணத்தின் மாகாண சுகாதார அமைச்சுக்களுக்கு முறையே மேற்கொள்ளப்பட்ட ரூபா 278 மில்லியன் மற்றும் ரூபா 110 மில்லியன் ஒதுக்கீடுகள் பொதுத்திறைசேரியினால் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தென் மாகாணத்தின் மாகாண சுகாதார அமைச்சிற்கு பொதுத்திறைசேரியினால் விடுவிக்கப்பட்ட ரூபா 360 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகளில், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின்மீது ரூபா 338.46 மில்லியன் தொகையொன்று மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. செலவிடப்படாத ரூபா 21.54 மில்லியன் தொகையான பெறுகைகள் மாகாண சபையினால் பேணப்பட்ட மாகாண நிதியக் கணக்கொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.2 பௌதிக செயன்முன்னேற்றம்

செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், 09 பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டிகள் மற்றும் 11 பணவளிப்பற்ற இணைப்புக் குறிகாட்டிகளினூடாக செயற்திட்டத்தின் பௌதீக இலக்குகளினை அடையவேண்டியிருந்தது. நாட்டின் தொலைதூரப் பிரதேசங்களிலுள்ள சமுகங்களின் சலுகையளிக்கப்படாத துறைகளிற்கான சுகாதார மற்றும் பராமரிப்பு வசதிகளினை முன்னேற்றுவதற்காக செயற்திட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட மட்டம் வரை குறிப்பிடப்பட்ட நலன்கள் அடையப்பட்டிருக்கவில்லை என மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விபரமான கணக்காய்வுகளில் வெளிப்படுத்தப்பட்டது. வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் விபரிக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

(அ) சப்ரகமுகவ மாகாணத்திலுள்ள தங்குமிடங்களின் திருத்தங்கள், வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களின் புனரமைப்பு வேலைகள் போன்ற நோக்கங்களுக்கு செயற்திட்டத்தினால் செலவிடப்பட்ட ரூபா 2.44 மில்லியன் தொகை, செயற்திட்டத்தின் ஆவணங்களில் உள்ளடக்கப்படவில்லை. என அவதானிக்கப்பட்டது. மேலும், சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண சுகாதார அமைச்சின் உள்நாட்டுப் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி நோக்கங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 41 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகளில், செலவிடப்பட்ட ரூபா 12.12 மில்லியன் தொகையொன்று செயற்திட்டத்தின் குறித்த நோக்கங்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டு காணப்படவில்லை.

(ஆ) பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டி - 04 இன் பிரகாரம், தொடர்புடைய நோக்கங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட அவ்வாறான 546 வைத்தியசாலைகளில், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாணரீதியில் முகாமை செய்யப்பட்ட 382 வைத்தியசாலைகளிலிருந்து e-IMMR முறைமையினூடாக சுகாதார தகவல்களினைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. ஆகையினால், மீளாய்வாண்டின் போது e-IMMR முறைமையினூடாக 446 பிரதேச வைத்தியசாலைகள் அசைவற்ற தகவல்களினை சமர்ப்பித்திருந்ததுடன் மாகாண மட்டத்தில் திருப்திகரமானதாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், திருகோணமலை மாவட்டத்திலுள்ள 07 பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் பதுளை மாவட்டத்திலுள்ள 23 மாவட்ட வைத்தியசாலைகளிலிருந்து மீளாய்வாண்டின் போது தகவல்களினைப் பெறுவதில் தாமதான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது.

(இ) பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டி - 05 இன் பிரகாரம், கர்ப்பிணி பெண்கள் மற்றும் 5 வயதிற்குக் குறைந்த சிறுவர்களுக்கான கவனிப்பு வசதிகளினை, நாடளாவிய ரீதியில் காணப்படும் அவ்வாறான 3,841 சிகிச்சை நிலையங்களில் 3,646 தாய் மற்றும் சேய் சுகாதார சிகிச்சை நிலையங்களுக்கு உபகரணம் மற்றும் ஏனைய வசதிகளினை வழங்குவதனூடாக மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள அவ்வாறான 354 சிகிச்சை நிலையங்களில் 294 தாய் மற்றும் சேய் சுகாதார சிகிச்சை நிலையங்களுக்கு மாத்திரம்

தேவையான உபகரணம் மற்றும் ஏனைய வசதிகள் வழங்கப்பட்டிருந்தமை அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரீட்சிப்பொன்றில் வெளிப்படுத்தப்பட்டது.

(ஈ) பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டி - 06 இன் பிரகாரம், சுகாதார வைத்திய அதிகாரியொருவரின் கண்காணிப்பின் கீழ் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் தலா ஆகக்குறைந்தது 02 ஆரோக்கிய வாழ்க்கைமுறை நிலையங்களினை செயற்திட்டத்தின் காலப்பகுதியின் போது ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. ஆகையினால், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாடளாவிய ரீதியில் 331 ஆரோக்கிய வாழ்க்கைமுறைமை நிலையங்களினை ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் அதில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 311 ஆரோக்கிய வாழ்க்கை முறைமை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. வேலைத்திட்டத்தின் பிரகாரம், மொனராகல, நுவரெலியா, கொழும்பு, கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் 150 ஆரோக்கிய வாழ்க்கைமுறைமை நிலையங்கள் ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அதில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொடர்புடைய பிரதேசங்களில் 124 ஆரோக்கிய வாழ்க்கை முறைமை நிலையங்கள் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

(உ) பணவளிப்பற்ற இணைப்புக் குறிகாட்டி - 01 இன் பிரகாரம், தொற்றா நோய்களினைக் கட்டுப்படுத்துவதற்கு மற்றும் 40 வயதிற்கு மேற்பட்ட நபர்களுக்கான நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் மற்றும் புற்றுநோய்களின் மீதான மருத்தவ பரீட்சிப்புக்களினை நடாத்திச் செய்வதற்கு சுவடிவி(Suwadivi) சிகிச்சை நிலையங்களின் தரத்தினை முன்னேற்றுவதற்கு செயற்திட்டம் நிதிகளினை ஒதுக்கியிருந்தது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாடளாவிய ரீதியில் 40 வயதிற்கு மேற்பட்ட 5,305,576 நபர்களினைப் பரீட்சிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் அந்தத் திகதியில் உள்ளவாறு 1,431,468 நபர்கள் மாத்திரம் பரீட்சிக்கப்பட்டிருந்தனர்.

(ஊ) பணவளிப்பற்ற இணைப்புக் குறிகாட்டி - 06 இன் வேண்டுகோள்களின் பிரகாரம், அவ்வாறான 890 நிறுவகங்களில், 524 ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்களில் தெரிவுசெய்யப்பட்ட தொற்றா நோய்களுக்கான 16 மருந்துக்களுக்கான பாதுகாப்பு இருப்பொன்றை பேணுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், புத்தளம், காலி, மட்டக்களப்பு, குருநாகல் மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலுள்ள 81 ஆரம்ப சுகாதார கவனிப்பு நிறுவகங்கள், மீளாய்வாண்டின் போது மருந்துப் பொருட்களின் இருப்புக்களில் வேண்டப்பட்ட மட்டத்தை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) பணவளிப்பற்ற இணைப்புக் குறிகாட்டி - 11 இன் வேண்டுகோள்களின் பிரகாரம், 28 தள வைத்தியசாலைகள் உள்ளடங்களாக நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 69 வைத்தியசாலைகளினால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் மற்றும் அபாயகரமான கழிவு அனுமதிப்பத்திரத்தினைப் பெறுவதற்கு தேவையான மற்றும் நியம கழிவு முகாமைத்துவ நடைமுறைகளினை பேணுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12 வைத்தியசாலைகள் மாத்திரம் கழிவு முகாமைத்துவ முறைமைகளுக்கான அனுமதிப்பத்திரங்களினைப் பெற்றிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண வைத்தியசாலைகளிலுள்ள 30 நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் அவற்றின் மீது ரூபா 237.84 மில்லியன் கூட்டுத்தொகையான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 55.17 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் பூர்த்தியாக்கப்பட வேண்டிய 20 நிர்மாண ஒப்பந்தங்களின் கீழுள்ள வேலைகள் 2017 திசெம்பர் 31 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 33.16 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் வழங்கப்பட்ட 03 நிர்மாண ஒப்பந்தங்கள் அதனைத் தொடர்ந்து ரத்துச்செய்யப்பட்டிருந்தது. ரூபா 237.84 மில்லியன் கிரயமொன்றில் வழங்கப்பட்ட 07 ஏனைய ஒப்பந்தங்களின் கீழான நிர்மாண வேலைகளின் பௌதீக செயலாற்றல், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 15 சதவீதம் தொடக்கம் 90 சதவீதம் வரையான வீச்சில் தொடர்ந்தும் காணப்பட்டது.

(ஆ) ரூபா 279.90 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் 2017 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்படவேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட ஊவா மாகாணத்திலுள்ள, பண்டாரவலயிலுள்ள மாகாண சுகாதார பயிற்சி நிலையம், புத்தலயிலுள்ள மாவட்ட வைத்தியசாலை மற்றும் பொரலன்ட மற்றும் வெலிமடயிலுள்ள தள வைத்தியசாலைகளின் நிர்மாண வேலைகள், 2018 யூன் 30 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மஹியங்கனவிலுள்ள தள வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்ட நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் போது கைவிடப்பட்டிருந்தது.

### 3.4 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பொதுவான அம்சமொன்றாக, கடன் பெறுகைகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் குறித்த நோக்கங்களுக்காக மாகாண சுகாதார சபைகளினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. வைத்தியசாலைகளில் காணப்பட்ட கூட்டிணைந்த வசதிகள் மற்றும் தொடர்புடைய வைத்தியசாலைகளின் உண்மையான தேவைப்பாடுகளினை கருத்திற்கொள்ளாது கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் வைத்தியசாலை அதிகாரசபைகளினால் வேண்டுகோள்விடுக்கப்பட்ட அவ்வாறான உபகரணங்கள் பல வெளிப்படுத்தப்பட்டது. களப் பரீட்சிப்புக்களில் அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(அ) நீர் விநியோகம் மற்றும் மின்சாரத்தின் பற்றாக்குறை காரணமாக, சப்ரகமுவ மாகாணத்தின் தம்பமாதயில் ரூபா 2.48 மில்லியன் கிரயமொன்றில் புனர்நிர்மாணிக்கப்பட்ட சுகாதார நிலையம் குறித்த நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. மேலும், ரூபா 11.04 மில்லியன் கிரயமொன்றில் செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யயப்பட்ட 280 கூட்டு கதிரைகள், 79 NP உபகரணங்கள் மற்றும் 3 சுவர் பிராணவாயு சீராக்கிகள், 2018 மே 30 வரையிலும் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள மாகாண வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டிராது விளைவற்றுக் காணப்பட்டமை களப் பரீட்சிப்பில் வெளிப்படுத்தப்பட்டது. மேலும், சப்ரகமுவ மாகாணத்திலுள்ள பலாங்கொட, எஹலியகொட, எம்பிலிப்பிட்டிய, கஹவத்த, வரக்காப்பொல, மாவனல்ல மற்றும் ஹரவனல்லயிலுள்ள பிராந்திய வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பில், ரூபா 46.51 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட பல் ஊடுகதிர் (X-Ray) இயந்திரங்கள், கூட்டு கதிரைகள், பின உறைவிப்பான், மெத்தைகள் மற்றும் கீற்று(Slit) விளக்குகள் போன்ற உபகரணங்கள் ஒரு வருட காலப்பகுதிக்கும் மேலாக தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2017 பெப்ரவரி மற்றும் ஏப்ரலில் 03 சந்தர்ப்பங்களில் எம்பிலிப்பிட்டியயிலுள்ள தள வைத்தியசாலைக்கு 200 கூட்டு கதிரைகளினை சப்ரகமுவ மாகாணத்திலுள்ள மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகம் விடுவித்திருந்தது. எவ்வாறாயினும், வைத்தியசாலையினால் பேணப்பட்ட பதிவுகளின் பிரகாரம், 2018 மே 30 இல் உள்ளவாறு 151 கதிரைகள் மாத்திரம் பெறப்பட்டிருந்தது.

(இ) ஏனைய அவசியமான உபகரணங்களின் பற்றாக்குறை காரணமாக, மத்திய மாகாணத்திலுள்ள மனிஹின்னயிலுள்ள மாவட்ட வைத்தியசாலையின் ஆய்வுகூடம் பயன்படுத்தப்படாது தொடர்ந்தும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) ரூபா 1.16 மில்லியன் கிரயமொன்றில் செயற்திட்டத்தினால் நிர்மாணிக்கப்பட்ட திண்மக் கழிவு முகாமைத்துவ அலகு 2017 திசெம்பர் 07 இல் ஊவா மாகாணத்திலுள்ள ஹிக்குருகடுவயிலுள்ள தள வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2018 யூன் 30 வரையிலும் தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டது. மேலும், ஊவா மாகாணத்திலுள்ள சுகாதார சேவைகள் பயிற்சி நிலையத்தின் கட்டிட நிர்மாண வேலைகள் 2018 மார்ச் 31 வரையிலும் பூர்த்தியாக்கப்படாது தொடர்ந்தும் காணப்பட்டமையால் ரூபா 3.31 மில்லியன் கிரயமொன்றில் செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட கணனிகள், அச்சுப்பொறிகள், நிழற்பிரதியெடுக்கும் இயந்திரம் மற்றும் பல் உருக்காட்டி ஊடகம் போன்ற அலுவலக உபகரணங்கள், தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டது.

(உ) ரூபா 18.38 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ கருவிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் பிபிலயிலுள்ள தள வைத்தியசாலை, தம்பகல்லயிலுள்ள பிரதேச வைத்தியசாலை, ஊவா மாகாண பதுளையிலுள்ள பிரதி மாகாணப் பணிப்பாளரின் அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஒரு வருடத்திற்கு மேலாக தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது.

(ஊ) 2017 திசெம்பரில் ரூபா 3.25 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட கண் சத்திரசிகிச்சை கட்டிலொன்று, வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சை நிபுணர், 04 வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பதவிணியினர் உறுப்பினர்களின் பற்றாக்குறை காரணமாக அறுவைச் சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காமையினால், ஊவா மாகாணத்திலுள்ள பண்டாரவல மாவட்ட வைத்தியசாலையின் வளாகத்தில் 2018 யூன் 30 வரையிலும் விளைவற்று தொடர்ந்தும் காணப்பட்டது. மேலும், ஊவா மாகாணத்தின் பிபிலயிலுள்ள தள வைத்தியசாலையில் ரூபா 5 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட அதி தீவிர சிகிச்சை அலகு மற்றும் அவற்றிக்கு ரூபா 6.64 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்கள், வைத்திய உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக, ஒரு வருடத்திற்கு மேலாக, தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டது.